மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) ஆம்.

(எ) இது குறித்து அரசிடமிருந்து இறுதி ஆணைகள் வரும் வரை தொகை கொடுக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

(ஐ) ரூ. 58,870-16 (ஐம்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று எழுபது ரூபாய், பதினாறு காசு மட்டும்).

திரு. நா. காசிராமன் : நகராட்சிக்குச் சேரவேண்டிய இவ்வளவு பெரிய தொகையை நிறுத்தி வைப்பதால் நகராட்சி நிதி நிலைமையில் நெருக்கடியான கட்டம் உண்டாகிறது. ஆகவே, உடனடியாகத் தொகையைக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நகராட்சி மன்றம் குறிப்பிட்ட ஒரு சினிமாக் கொட்டகையினுடைய உரிமையாளர்கள் மீது இந்த வரி விதிப்புப் போட்டதைத் தொடர்ந்து வாரியத்தினிடம் ஆய்வு மனு தாக்கீது செய்யப்பட்டது. 1961-ம் ஆண்டு உள்ளாட்சித் துறைச் சட்டம் விதி 3 (3) பிரிவுக்கு முரணானது என்று இருக்கிறது. கூடுதல் தொகையைத் திருப்பித் தரவேண்டுமென்று கூறப்பட்டது. அதை எதிர்த்து நகராட்சிப் பொறுப்பு அதிகாரி அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார். சிக்கல் நிறைந்த கும்பகோணம் நகராட்சிப் பிரச்சினையாக இருப்பதால் இது பற்றி அரசாங்கம் வழக்கறிஞர்களோடு தீவிரமாகப் பரிசீலித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. நா. காசிராமன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சிக்கல் நிறைந்த கும்பகோணம் நகராட்சி நிர்வாகம் என்று சொன்னார்கள். பிரச்சினை சிக்கலானதா அல்லது நகராட்சி நிர்வாகம் சிக்கலானதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சிக்கல் நிறைந்த கும்பகோணம் நகராட்சிப் பிரச்சினை என்று சொன்னேன். கும்பகோணத்தில் அந்தப் பிரச்சினை இருக்கும் காரணத்தால் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கலாம்.

வடுகப்பட்டி ஊராட்சி ஒன்றியம், பள்ளிக் கட்டடம்

* **296 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், வடுகப்பட்டியில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியின் கட்டடம் கட்ட 1964-ல் அஸ்திவாரம் போடப்பட்டதா ?

(இ) இதுவரை கட்டடமே கட்டத் தொடங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) கிருஷ்ணராய புரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வடுகப்பட்டியில் ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டிடம் கட்ட தீர்மானம் எதுவும் நிறைவேற்ற வில்லை. இது விஷயமாக ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் எவ்வித மதிப்பீடும் தயார் செய்யப்படவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நான் வடுகப்பட்டிக்குச் சென்றிருந்த நேரத்தில் பள்ளிக்கூடம் கட்டுவதற்காகத் தோண்டப் பட்ட அஸ்திவாரத்தையே பொதுமக்கள் என்னிடம் காட்டினார் கள். அமைச்சர் அவர்களுக்கு ஒன்றியத்திலிருந்து வேறு தகவல் வந்திருப்பதாக அறிகிறேன். அமைச்சர் அவர்கள் இதுபற்றி மீண்டும் விசாரித்து அறிக்கை அனுப்பக் கோருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : எந்த விதமான மதிப்பீடும் தயார் செய்யாமல், அனுமதியும் பெருமலேயே பாலராஜபுரம் ஊராட்சித் தலைவர் 1963-64-ல் அஸ்திவாரத்திற்கு மண் பறித்திருக் கிறார். அதற்கான செலவு 23 ரூபாய். அவர் அதை அப்படியே விட்டு விட்டுப் போய்விட்டார். இப்போது கட்டடம் இல்லாமல் பொதுச்சாவடியில் நடைபெற்று வருகிறது. நடப்பு நிதியாண்டில் ஒன்றியத்தின் மூலம் இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வற்புறுத்தலாம்.

Peace Corps volunteers

*297 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether a number of (i) men and (ii) women peace corps volunteers are to take up assignments in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

பரசலூர், செம்பனார் கோயில் ஊராட்சி மன்றங்களின் இணைப்பு

*298 வினா—**திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றிப்புக்கு உள்ளடங்கிய பரசலூர், செம்பனார்கோயில் ஊராட்சி மன்றங்களிலிருந்து, குறிப் பிட்ட இரண்டு ஊராட்சி மன்றங்களையும் இணைத்து பேரூராட்சி மன்றமாக அமைக்கக் கோரி விண்ணப்பம் எதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?